# சமகாலக் காந்தியச் சிறுகதைகள் குறித்து ஓர் ஆய்வு

**ச. மகேஸ்வரி**
ஆய்வியல் நிறைஞர் தமிழ்
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
காந்திகிராமம், திண்டுக்கல்

மலர்: 4
இதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

இன்றையப் படைப்பிலக்கியங்களின் கதைக்கரு மனித வாழ்விலிருந்தே உருவாகிறது. சிறுகதையிலக்கியம் மனித வாழ்க்கையோடு நெருங்கியத் தொடர்புடையதாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சுதந்திரப் புரட்சியன் நாயகனாக மகாத்மா காந்தியடிகளைக் குறிப்பிட்டுக் கூறலாம் விடுதலை வேள்வியில் அவருடைய தொண்டு மகத்தானது. பல இலக்கியப் படைப்புகளில் யாவற்றிலும் அவரே மையப் பொருளானார். கவிதை, சிறுகதை, நாவல் என இவையனைத்திலும் காந்தியும் காந்தியமும் நிறைந்திருந்தன. அந்தவகையில் இக்கட்டுரையானது இந்நூற்றாண்டில் தோன்றிய காந்தியச் சிறுகதைகளின் போக்குகள் குறித்து ஆராய்கிறது.

## காந்தியச் சிறுகதைகளின் வளர்ச்சி

இருபதாம் நூற்றாண்டில் இராஜாஜி, கல்கி, சி.சு.செல்லப்பா, அகிலன், நா.பார்த்தசாரதி, பெ.தூரன், டி.எஸ்.ராமைய்யா, விந்தன் முதலானோர் காந்தியச் சிறுகதைகளை முன்னெடுத்துச் சென்றனர். இப்படைப்புகளின் மையங்கள் யாவும் காந்திய ஆளுமையையும், காந்தியக் கொள்கைகள், அவரது நிர்மாணத் திட்டங்கள் முதலியவற்றை மக்களுக்கு வலியுறுத்தும்நோக்கில் அமைந்திருந்தன. விடுதலைக்குப்பின் எழுச்சி பெற்ற திராவிடம், பொதுவுடைமை போன்ற பல புதிய அரசியல் கருத்தாக்கங்கள் தலையெடுத்ததன் விளைவாகக் காந்தியச் சிறுகதைகளின் வளர்ச்சி குன்றியது. இருபத்தோராம் நூற்றாண்டில் காந்தியத்திற்கான தேவை மதவாதம், சுற்றுச்சூழல் மாற்றங்கள், உலகமயமாதல் முதலியவற்றின் நிலைபாட்டைத் தகர்க்கும் ஆயுதமாக பார்க்கப்படுகிறது. சென்ற நூற்றாண்டில் வெறும் பரப்புரையாக அமைந்த காந்தியம் இந்நூற்றாண்டின் விமர்சனக் கண்ணோட்டத்தோடும், பின் நவீனத்துவப் பார்வைகளான கட்டுடைப்பு, மறுவாசிப்பு, மீட்டுருவாக்கம் முதலிய சிந்தைனைகளோடும் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்பண்புகளுடன் காந்தியப் படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில் இந்நூற்றாண்டில் தோன்றியுள்ள காந்தியப் புனைவுச் சிறுகதைகள் குறித்துப் பார்க்கலாம்.

**ஆயுதமா? அகிம்சையா?**

ஜெயமோகன் தனது வலைப் பக்கத்தில் இரண்டு காந்தியப் புனைவுச் சிறுகதைகளை எழுதியுள்ளார். அவை "நீரும்நெருப்பும்", "மெல்லிய நூல்"ஆகும். இவ்விரு சிறுகதைகளும் அகிம்சைக்கும் வன்முறைக்குமான போராட்டத்தை எடுத்துரைத்து அகிம்சையின் மகத்துவத்தை நிலைநிறுத்துகின்றன.

"அகிம்சை என்பதன் பொருள் கொல்லாமை, எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை. கிறித்துவம், சமணம், பௌத்தம், யுதம் முதலிய சமயங்களும் அகிம்சையை வலியுறுத்துகின்றன. சமயங்களில் மட்டுமே வலியுறுத்தப்பட்ட இவ்வகிம்சைக் கொள்கையை சமுதாய மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தியவர் காந்தியடிகளே. (சாந்தா ஆப்தே)

ஜெயமோகனின் நீரும் நெருப்பும் சிறுகதையில் வன்முறையின் குறியீடான நெருப்பின் தத்துவமானது "நிலத்திற்குள் இருக்கும் ஒவ்வொரு துகளும் நெருப்பே... இந்த உடலும் நெருப்பாலானதே..... நெருப்பே முதற்பெரும் புதம்...... நெருப்பின் வெவ்வேறு வடிவங்கள் தாம் நீரும், நிலமும், காற்றும் என்பன" போன்ற கருத்துக்களின் வாயிலாக பைராகி என்ற கற்பனைப் பாத்திரம் வன்முறைக்கருத்தினை நிலைநாட்ட முயல்கிறது. இவ்வன்முறைக் கருத்தை நிராகரிக்கும்விதமாக காந்திஜி "என்வழி நீர்தான்..... இந்த தேசம் நெருப்புக்குண்டமாக ஆக வேண்டாம். அது ஒரு குளிர்ந்த தடாகமாக ஆனால் போதும்..." என்று கதை முழுவதும் அகிம்சை வழியை எடுத்துரைக்கிறார்.

இச்சிறுகதையில் வன்முறையின் குறியீடாக நெருப்பும் அதை ஏற்றுப் பேசும் கற்பனைப் பாத்திரமாக பைராகியும், அகிம்சையின் குறியீடாக நீரும் அக்கருத்தை நிலை நாட்ட காந்திஜியும் நேரடிக் கதாப்பாத்திரமாக அமைந்துள்ளன.

ஜெயமோகனின் மற்றொரு சிறுகதையான "மெல்லிய நூலில்" கேரள தலித் தலைவரான அய்யன்காளி மற்றும் அவரது கூட்டத்தினருக்கும் காந்தியடிகளுக்கும் இடையே நடக்கும் அகிம்சைக்கும் வன்முறைக்குமான உரையாடல் புனைவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அய்யன்காளி காந்தியைச் சந்தித்தது வரலாறாகும். இவ்வரலாற்று நிகழ்வினை மையமாகக்கொண்டு ஜெயமோகன் அவ்விருவருக்குமான உரையாடலை கற்பனைப்புனைவாக வடித்துள்ளார்.

"நாயினும் கேவலமாக நாங்கள் வதைக்கப்படும்போது எங்கள் பெண்கள் கற்பழிக்கப்படும்போது, எங்கள் குழந்தைகள் அடிமைகளாக்கப்படும்போது, நாங்கள் எப்படி அகிம்சையும் தர்மமும் பேச முடியும்?".

"அநீதியை நீதியால் எதிர்க்க வேண்டும். கொடுமையைக் கருணையால், துவேசத்தை அன்பால், அநீதிக்கு அடிமைப்படும் மக்கள் அநீதியுடன் சமரசம்செய்து கொண்டவர்கள். சமரசங்களில் வெல்வது நமது பலவீனம். வன்முறை நம்மையும் எதிரிகளைப் போன்று மாற்றும்''. எனக் கதையில் காந்தியடிகள் வன்முறையினால் ஏற்படும் அழிவையும் அகிம்சையின் முக்கியத்துவத்தையும் கூறுகிறார்.

இவ்விருவருக்குமான உரையாடல் வரலாற்றில் அம்பேத்கருக்கும் காந்திக்குமிடையே நிகழ்ந்த உரையாடலை நினைவு கூறும்விதமாக அமைந்துள்ளது.

இவ்விரு கதைகளுமே அகிம்சைக்கும் வன்முறைக்குமான கருத்து வேறுபாடு களை சமஅளவில் முன்வைக்கின்றன. கதை முடிவில் வன்முறையைப் பேசும் கதாப்பாத்திரங்கள் அகிம்சை வழியை ஏற்று மனமாற்றம் அடைகின்றன. ஆசிரியர் ஜெயமோகனும் காந்தி வழிநின்று இவ்வுலகிற்கு அகிம்சையைப் பரிந்துரைப்பதை அறிய முடிகிறது.

**காந்தியம் வழிபாடா? செயல்பாடா?**

தேவிபாரதியின்“பிறகொருஇரவு”சிறுகதை பிரிவினைக்கால ஓலங்களையும் அதைக்கண்டு காந்தியின் மனம் வேதனைப்பட்டு மரணத்தை எதிர் நோக்கியிருந்த வரலாற்றுத் தருணங்களையும் புனைவுச் சம்பவங்கள் மற்றும் கதாப்பாத்திங்கள் வழி விவரித்துள்ளது. கதையின் ஒவ்வொரு காட்சியிலுமே ஆசிரியர், காந்தியின் ஆழ்மனச் சிந்தனைகளை ஆராய்ந்துள்ளார்.

“அவள் கண் முன் பெற்றோர்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டனர் ................. சத்தியாக்கிரகியாக தன் இருகைகளை கூப்பி நின்ற தன் தந்தையின் கரங்களை வெட்டினர்” எனப் பிரிவினையின் துயரைக் கதை விவரிக்கிறது.

பிரிவினைக் காலத்தில் காந்தியின் மனம் சொல்லொணாத் துயருற்றிருந்தது. காங்கிரசால் காந்தி கைவிடப்பட்டிருந்தார். அவரது பேச்சைக் கேட்க ஆசிரமத்தில் யாருமின்றி தனித்து விடப்பட்டிருந்த நிலையினையும் கதை வழி உணரமுடிகிறது.

மகாத்மா வேடமணிந்து போலியான காந்தியாக வந்திருந்த பகவதிச்ச ரணைக் கண்டு மக்களடைந்த பரவசத்தை எடுத்துரைக்கும் ஆசிரியர், மக்கள் காந்தியக் கருத்துக்களிலும் கொள்கைகளிலும் புரிதலின்றி அவரைத் தெய்வமாக்க முயன்று கொண்டிருந்ததையும் அவரது வழிமுறைகளைப் பின்பற்றாது அவர் தம் நினைவுகளை அவரது உடைமைகளின் வழி சேகரித்து வழிபட்டுக் கொண்டிருப்பதையும் விளக்க முற்பட்டுள்ளார்.

ஒரு சத்தியாகிரகியாக காந்தி செய்வதறியாது குழம்பியிருந்த மனநிலையையும் “இவ்வன்முறைகளுக்கு யார் பொறுப்பு? நானே தானோ?” என்பன போன்ற ஆழ்மனக்கு முறல்களையும் விவரித்துள்ளார். மரணத்தை எண்ணிய அவரது இறுதி நாட்களை அவரது குரு டால்ஸ்டாயின் மரணத்தைப் போன்று அமைவதான கற்பனை ஆசிரியரின் கவித்து வத்தை வெளிப்படுத்துகிறது. காந்தியம் வழிபாடா? செயல்பாடா? என்பதை விளக்க முற்பட்டுள்ள இக்கதைப் பயணம் புதியதாக அமைந்துள்ளது.

**காந்தியப் பெண்மையின் அம்சம்**

எஸ்.ராமகிருக்ஷ்ணனின் “காந்தியோடு பேசுவேன்” சிறுகதையானது, குடும்ப வாழ்க்கையில் அல்லல்படும் ஒரு பெண்ணின் மனம் காந்தியைச் சந்திக்கத் துடித்ததைச் சித்தரித்துள்ளது. காந்தி பற்றிய பெண்களின் புரிதலானது சற்று மாறுபட்டது. காந்தியை அவர்கள் தாய்மையின் வடிவமாகப் பார்த்தனர்.

“வார்தாவுக்குப் போயி காந்தி முன்னாடி நின்னுகிட்டு இருந்தப்போ அவரை ஒரு ஆணாக வேறுபடுத்தி பார்க்க என்னால முடியல” எனக் கதையில் அந்தப் பெண்ணின் அனுபவம் வெளிப்படுகிறது.

“காந்தியிடம் பெண்களின் அகமே உள்ளது. அது வலிமையானது. உண்ணாவிரதத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்துகிறார் என்பதே பெண்மை உருவாக்கிய எதிர்ப்பு வடிவத்தின் அம்சமாகும்” எனக் கதை முழுவதும்

குடும்பப் பெண்களின் காந்தியப் புரிதல் வெளிப்படுகிறது.

காந்தி "நவ ஜீவன்", "யங் இந்தியா" போன்ற பத்திரிக்கைகளிலும் பெண்ணினத்தை ஆணைவிட வலிமையான சீரிய இனம், அது பலவீனமானதல்ல, அகிம்சையின் வெற்றி பெண்ணினத்தையேச் சார்ந்துள்ளது என்றும் எழுதியுள்ளார்.

"மேலைநாட்டுப் பெண்ணியத்தை நகலெடுத்துப் பார்ப்பதில்லை காந்தியப் பெண்ணியம். அது இந்திய வகைப்பட்டது என்ற விச்சலனின் கூற்றை இக்கதையோடுப் பொருத்திப்பார்க்க முடிகிறது.

### காந்தியின் வாழ்க்கை நிகழ்வுகளின் கதையாக்கம்

நகுல் வசன், காந்தியடிகளின் சுயசரிதையை அடிப்படையாகக் கொண்டு "இவன் மனிதன்" என்னும் சிறுகதையை தனது வலைப் பக்கத்தில் எழுதியுள்ளார்.

காந்தி தனது தவறுகளிலிருந்தே தன்னை முழுமையான மனிதனாக்கிக் கொண்டார். சிறுவயதில் அவர் கண்ட சிரவணன் நாடகமும் அரிச்சந்திரன் நாடகமும் அவரை நல்வழிப்படுத்தின. வாலிபப் பருவத்தில் அவரது நண்பன் மேதாப்பின் தவறான வழிகாட்டுதலால் பல தவறுகளைச் செய்தார். மது, புலால் உண்டார். வேசி வீட்டிற்கும் அழைத்துச் செல்லப்பட்டுக் கடவுளின் செயலால் அதிலிருந்து தப்பினார்.

அவர் வாழ்வில் நிகழ்ந்த பல நெகிழ்வான தருணங்களையும் கதை விவரிக்கின்றது. காந்தியடிகள் சந்தித்த சில மனிதர்களும் வாசிப்பு அனுபவமும் அவரை மிகப் பெரிய ஆளுமையாக மாற்றியதையும் ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

காந்தியடிகளின் சுயசரிதையின் ஒரு பகுதியை வரலாற்றுச் செய்திகளை மாற்றாத வண்ணம் புனைவாக்கித் தந்துள்ளார்.

### காந்தி கொலையில் மர்மம்

சி. சரவணகார்த்திகேயன் "நான்காம் தோட்டா" என்ற சிறுகதையை 2017 இல் காந்தி கொலை வழக்கு மறுவிசாரணை குறித்த சர்ச்சை எழுந்த காலக் கட்டத்தில் ஆனந்த விகடனில் எழுதினார். காந்தியின் கொலைச் சம்பவம் குறித்த தகவல்களை ஆவணப்படுத்தும் நோக்கில் கதை அமைந்துள்ளது.

காந்தியின் கொலை குறித்த தகவல்களைத் தேடும் ஒரு பத்திரிகைப் பெண்ணின் பயணமாகக் கதை நகர்கிறது. காந்தி என்ற பெரிய ஆளுமையின் மரணம் தொடர்பான பல வினாக்களுக்குத் "தெரியாது" என்ற பதில், அரசின் அலட்சியத்தைச் சுட்டிக் காட்டியுள்ளது. காந்தியின் உடலைத் துளைத்தது மூன்று தோட்டாக்களே, நான்காவது தோட்டா என்று ஒன்றில்லை. நான்காம் தோட்டா உள்ளது என்பது தொடர்பாக எழுந்த சர்ச்சைகளுக்கு விடைகாண தொடர்ந்த இக்கதைப் பயணத்தில் ஆசிரியர், காந்தியின் உடல் ஏன் போஸ்ட் மார்ட்டம் செய்யப்படவில்லை? "பிரிட்டிஷ்காரரான ஃபார்ச்சூர் ஏன் இவ்வழக்கில் குற்றவாளியாகக் கருதப்படவில்லை?" என்பன போன்ற வினாக்களை எழுப்பி காந்தி கொலையில் இன்னும் பல மர்மங்கள் இருப்பதை வெளிக்கொணர முயன்றுள்ளார்.

### மரணத்திற்குப் பிறகான காந்தியின் மனம்

சுனில் கிருஷ்ணனின் "அம்புப் படுக்கை" எனும் சிறுகதைத் தொகுப்பில் "ஆரோகணம்" எனும் காந்தியச் சிறுகதை இடம் பெற்றுள்ளது. இக்கதை காந்தியின் மரணத்தில் தொடங்கி

மரணத்திற்குப் பிறகான அவரின் அமைதியற்ற மனநிலையையும் சிந்தனை ஓட்டங்களையும் இறுதியாக அவருக்குக் கிடைத்த மோட்சம் குறித்தும் அதீதக் கற்பனைகளை வரலாற்றுச் சிதைவின்றி புனைவாக்கியுள்ளது.

கதை முழுவதும் காந்தியுடன் ஒரு நாய் பயணிக்கிறது. இக்கதைக்கான களமானது மகாபாரதத்திலுள்ள சொர்க்க ஆரோகணப் பருவத்தை மையமாகக்கொண்டு படைக்கப்பட்டுள்ளது. அத்தொன்மத்தில் நிகழும் தர்மனின் மோட்சம் காந்தியப் பயணத்துடன் தொடர்புபடுத்திப் புனையப் பட்டுள்ளது. கதையின் பல இடங்களில் மிருக உணர்ச்சிக்கும் மனித உணர்ச்சிக்குமான வேறுபாடுகள் ஒப்பிட்டுப் பார்க்கப் பட்டுள்ளன. கதையில் காந்தியின் ஆழ்மனச் சிந்தனை ஓட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மனைவி மீது கொண்ட காம உணர்வு, தன் மகன் ஹரிலாலின் தவறானபுரிதல், மனிதமனத்தின் குரூரங்கள், தனது போராட்டங்களில் ஏற்பட்ட அவநம்பிக்கை, சலிப்பு, கடந்து வந்த பாதை என அவரது அமைதியற்ற மனம் விவரிக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

ஆராயப்பட்டுள்ள இச்சிறுகதைகள் காந்தியைச் சுதந்திரப்போராட்ட வீரராகக் காட்டாமல் ஒரு தனிப்பட்ட மனிதனாகக் காட்ட முயன்றுள்ளன் உலகம் அறிந்த காந்தியின் புறச்செயல்பாடுகளைத் தவிர்த்து அவரின் அகச் சிந்தனைகளை ஆழ்மனத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இப்புனைவுப் படைப்புகள் யாவற்றிலும் காந்தி நேரடிக் கதாபாத்திரமாகப் புனையப் பட்டுள்ளார். இன்று சுயநலமாகிப் போன மனித மனங்களை மாற்றுவதற்கும் சுயநல அரசியலில் இருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்குமான வழியைக் காந்தியத்தில் தேடி அடைவதற்கான வாய்ப்பாகவும் இக்கதைகள் அமைந்துள்ளன.